# இஸ்லாமிய தொழுகை




ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது
இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)

# இஸ்லாமிய தொழுகை

## (தொழுகையும் அதன் முக்கிய அம்சங்களும்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது
இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)

வெளியிடுவோர்
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான், பஞ்சாப்

Tamil Translation of the book

# ISLAMI NAMAZ

# இஸ்லாமிய தொழுகை


Author : Hazrat Mirza Bashiruddeen Mahmood Ahmad, Khalifatul Masih II[ra]

Translated by : Muallim M.Muzammil

First edition : 2021

Copies : 1000

Publisher : Nazarat Nashr-o-Isha'at, Qadian, Gurdaspur Dist - 143516, Punjab

Printed at : Fazl-e-Umar Printing Press Qadian - 143516


**Noorul Islam Toll Free No:** 1800 103 2131

**Tamil Toll Free No:** 1800 425 40000

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|


| | |
|---|---|
| *1.* இஸ்லாமிய இறைவணக்க முறை | *5* |
| *2.* இறைவணக்கத்தின் குறிக்கோள் | *6* |
| *3.* தொழுகை துஆக்களின் சங்கமமாகும் | *11* |
| *4.* அல்லாஹ்வுடன் தொடர்பு | *12* |
| *5.* உளூ செய்யும் முறை | *14* |
| *6.* தொழும் முறை | *16* |
| *7.* தஷஹ்ஹுது | *27* |
| *8.* தரூத் ஷரீஃப் | *28* |
| *9.* துஆக்கள் | *30* |
| *10.* தொழுகையின் நேரங்கள் | *33* |
| *11.* தொழுகையில் துஆ | *34* |
| *12.* ஒரு சில திருக்குர்ஆன் வசனங்கள் | *35* |

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

نحمده و نصلی علیٰ رسوله الکریم وعلیٰ عبده المسیح الموعود

# இஸ்லாமிய இறைவணக்க முறை

ஐரோப்பியர்களில் ஒரு சாரார் இஸ்லாத்தைப் பற்றி இதுவரை தமக்குக் கூறப்பட்டவை அனைத்தும் சர்ச் ஏஜெண்டுகளின் காழ்ப்புணர்ச்சியின் விளைவாகும் என்ற நிலையை, இறைவன் தமக்கு வழங்கிய அறிவையும் திறமையையும் கொண்டு அடைந்துள்ளனர். இஸ்லாத்தைப் பற்றி புத்தம் புதிய மற்றும் உண்மையான அறிவைப் பெற விரும்பும் நல்லுள்ளம் கொண்ட, உண்மையை விரும்பும் அந்த ஐரோப்பியர்களுக்கு இஸ்லாத்தின் ஒப்பற்ற அடிப்படையைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். அது இஸ்லாத்தின் செயல் ரீதியான பகுதியின் முதல் அடிப்படை என்று கூறப்படுகின்றது. நான் கூற வருவது தொழுகையைப் பற்றியதாகும்.

ஆனால் முழுமையாக தொழுகையில் ஒரு முஸ்லிமிற்கு எவற்றையெல்லாம் செய்ய வேண்டியுள்ளதோ, அவற்றை நிறைவேற்றுவதற்கு என்னென்ன சொற்றொடர்களை அவருக்கு உச்சரிக்க வேண்டியுள்ளதோ அவற்றின் பொருளை எழுதுவதற்கு முன்பாக இரண்டு முக்கிய விஷயங்களைக் கூறி விடுவதை பொருத்தமானதாகக் கருதுகின்றேன்.

## இறைவணக்கத்தின் குறிக்கோள்

**முதல் விஷயம்:**

இறைவணக்கத்தின் குறிக்கோள், ஒருபுறம் அந்தத் தூயவனுக்கு முன்பாக தனது நன்றியுணர்வை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. அவனை அரபி மொழியில் அல்லாஹ் என்றும் ஆங்கிலத்தில் காட் (God) என்றும் கூறுகின்றனர். ஏனென்றால் இயல்பிலேயே மனிதன் தனக்குப் பேரருள் புரிந்தவனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவனாகவே இருக்கின்றான். இது தொடர்பாக நபிமொழியில் இவ்வாறு வருகின்றது;

جُبِلَتِ الْقُلُوبُ على حُبِّ مَنْ أحسَنَ إِلَيْهَا

ஜுபிலத்தில் குலூபு அலா ஹுப்பி மன் அஹ்ஸன இலைஹா

அதாவது மனிதனின் உள்ளம் அவன் தன் மீது பேரருள் புரிந்தவனுடன் கட்டாயம் அன்பு கொள்ளும் வகையில்தான் படைக்கப்பட்டுள்ளது. எனவே தொழுகையின் ஒரு மிகப் பெரிய குறிக்கோள், மனிதன் தன் இறைவனின் முன்னால் அவனது பேரருள்களை தனது நாவினால் ஒப்புக் கொள்வதாகும்.

ஆனால் இது மட்டுமின்றி இறைவணக்கத்திற்கு இன்னொரு குறிக்கோளும் உள்ளது. அது, பாவங்கள் மற்றும் தீமைகளிலிருந்து தூய்மையாக்குவதாகும். ஏனென்றால் அல்லாஹ் மனிதன் செய்யும் இறைவணக்கத்தின் தேவையுடையவன் கிடையாது.

மாறாக எந்த அளவு கட்டளைகளை அவன் மனிதனுக்கு வழங்கியுள்ளானோ அவற்றின் அசல் குறிக்கோள் அவனைத் தூய்மைப்படுத்துவதாகும். ஏனென்றால் அல்லாஹ் தூயவனாவான். அவன் தூய்மையற்றவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. அவனுடன் தொடர்பு வைத்துக் கொள்பவர்களும் தூய்மையாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றான்.

எனவே அனைத்து இறைவணக்கங்களிலும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது என்னவென்றால், அவற்றின் மூலம் மனித ஆன்மா தீமைகள் மற்றும் கெடுதல்களிலிருந்து தூய்மையாகிவிட வேண்டும். அவற்றின் மூலமாக மனிதனுக்கு எவ்வாறான ஆற்றல் கிடைத்துவிட வேண்டும் என்றால் அவன் பலவிதமான மன இச்சைகளை கைவிட்டு விடுவதற்கு தகுதியாகிவிட வேண்டும். ஒருபுறம் அல்லாஹ்வுடனான அவனது தொடர்புகள் சரியாகிவிட வேண்டும்; மறுபுறம் இறை படைப்பினங்களுடனும் அவன் நடந்து கொள்ளும் முறை முற்றிலும் சரியாகிவிட வேண்டும்.

எனவே தான் மார்க்கம் என்பதன் இலக்கணமாக இஸ்லாம் கூறுவதென்னவென்றால், அது இறைவனுடனான அடியார்களின் தொடர்புகளை உறுதிப்படுத்துவதாகவும், இறைவனுடனான தொடர்புகளை அடியார்கள் பேணிக் கொள்ளச் செய்வதாகவும் இருக்க வேண்டும். மேலும் எந்தவொரு மார்க்கத்தால் இந்த இரண்டு விஷயங்களிலிருந்தும் ஒன்றை நிறைவேற்ற முடிவதில்லையோ அது மார்க்கமாக

இருக்க முடியாது. ஏனென்றால் அதனால் மார்க்கத்தின் தேவை நிறைவேறுவதில்லை.

எனவே எந்த அளவிற்கு இறைவணக்கங்கள் நிர்ணயிக்கப்படுகின்றனவோ அவற்றின் அசல் குறிக்கோள், அடியானை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதும் பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான ஆற்றலை உருவாக்குவதுமாகும். மேலும் எந்த இறைவணக்கம் இந்த இரண்டு விஷயங்களைப் பெறுவதற்கான வழிகளை தோற்றுவிக்கின்றதோ அதுவே பயனுள்ள இறைவணக்கமாகும். அவ்வாறு இல்லையென்றால் அதில் மூழ்கியிருப்பது தனது நேரத்தை வீணாக்குவதாகவே இருக்கும். திருக்குர்ஆன் இவ்விஷயத்தை இவ்வாறு விளக்குகின்றது:

اِنَّ الصَّلٰوةَ تَنۡهٰى عَنِ الۡفَحۡشَآءِ وَالۡمُنۡكَرِ‌ؕ

இன்னஸ் ஸலாத்த தன்ஹா அனில் ஃபஹ்ஷாயி வல் முன்கரி

தொழுகை வெட்கக் கேடானதையும் பாவத்தையும் விட்டு தடுக்கின்றது. (29:46) அதாவது இறைவணக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றுகின்றது.

**இரண்டாவது விஷயம்:**

இறைவணக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு என்னென்ன விஷயங்களின் தேவை உள்ளது?

தொழுகையின் அசல் குறிக்கோள் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துதல், அவனுக்கு நன்றி செலுத்துதல் மற்றும் ஆன்மாவை

சீர்திருத்துதலாகும் என்பது தெரிந்து விட்டது. ஆக எந்த இறைவணக்க வழிமுறையின் மூலமாக இந்த இரு விஷயங்களும் கிடைக்கின்றனவோ அந்த இறைவணக்கமே உண்மையான இறைவணக்கம் ஆகும். மேலும் இந்த இறைவணக்கத்தின் பக்கம் வழிகாட்டும் மார்க்கமே உண்மையான மார்க்கமாகும். இஸ்லாம் தன்னைப் பின்பற்றுபவர்களுக்காக ஏற்படுத்தியுள்ள இறைவணக்கத்தின் வழிமுறையைப் போன்றும் இறை வணக்கத்தின் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்கு பயன்படுத்தியுள்ள வழிமுறைகளைப் போன்றும் வேறு எந்த மார்க்கமும் செய்யவில்லை. இறைவணக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அந்த வழிமுறைகளே தகுதியானவை என்பதை சிந்தித்து செயலாற்றும் ஒவ்வொரு மனிதராலும் தெரிந்து கொள்ள முடியும். அந்த வழிமுறைகள் இவையாகும்:

உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒன்றன் தாக்கம் மற்றொன்றின் மீது ஏற்படும் அளவிற்கு ஆழமான தொடர்பு உள்ளது. எவ்வாறு துக்கமான செய்தியைக் கேட்டதும் உடல் பரிதவிப்பின் அறிகுறிகளை வெளிப்படுத்தும் அளவிற்கு தாக்கத்திற்குள்ளாகின்றதோ அவ்வாறே உடலுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படும்போது ஆன்மாவும் சோகத்திற்குள்ளாகி விடுகின்றது. மகிழ்ச்சியின் நிலையும் இவ்வாறே இருக்கின்றது.

எனவே உள்ளத்தை இறைவன் பக்கம் திருப்புவதற்கு இந்த ஒரு வழிமுறையும் உள்ளது. அது என்னவெனில், இறை வணக்கத்தின் போது

உடலையும் எவ்வாறான நிலையில் வைக்க வேண்டுமென்றால், அதிலிருந்து பணிவு பிறக்க வேண்டும். அதன் தாக்கம் ஆன்மாவின்மீது ஏற்பட்டு உள்ளத்திலும் அதன் உருக்கமும், மென்மையும் பிறக்க வேண்டும்.

மனிதன் அல்லாஹ்வின் பக்கம் ஓர் உற்சாகத்துடன் திரும்பி விட வேண்டும். பணிவை வெளிப்படுத்த உலகத்தில் பல்வேறு செயல்முறைகள் கையாளப்படுகின்றன. சில நாட்டினர் குனிகின்றார்கள். சில நாட்டில் கைகளைக் கட்டிக்கொண்டு நிற்பதையும் சிலவற்றில் முழங்காலிட்டு நிற்பதையும் சிலவற்றில் தலைவணங்குவதையும் பணிவின் அடையாளமாகக் கருதப்படுகின்றது.

இஸ்லாம் இயல்பைப் படைத்தவனின் புறமிருந்துள்ளதாக இருப்பதால், அது அனைத்து இயல்புகளையும் பழக்க வழக்கங்களையும் கவனத்தில் கொண்டவாறு தொழுகையில் அந்த அனைத்து அடையாளங்களையும் ஒன்றிணைத்து விட்டது. மேலும் பலதரப்பட்ட இயல்புகளைக் கொண்ட மக்கள் எந்தெந்த நிலைகளிலெல்லாம் பணிவை வெளிப்படுத்துவார்களோ அவர்களின் இயல்பிற்கேற்ப தொழுகை இருக்கின்றது. அந்த பல்வேறு வடிவிலான பணிவின் தாக்கத்தால் மனிதனின் உள்ளம் உற்சாகத்தால் நிரம்பி விடுகின்றது. அல்லாஹ்வின் சந்நிதியில் வீழ்ந்து விடுகின்றது. உண்மையில் அதுவொரு கண் கொள்ளாக் காட்சியாகும். ஒரு முஸ்லிம் ரப்புல் ஆலமீனாகிய இறைவனின் சந்நிதியில் சில நேரம்

கைகளைக் கட்டியவாறு நிற்கின்றார். சிலநேரம் குனிந்து நிற்கின்றார். சிலநேரம் கைகளைத் தொங்க விட்டுக் கொண்டு நிற்கின்றார். சிலநேரம் சிரம் பணிகின்றார். சிலநேரம் முழங்காலிட்டு அமர்ந்து விடுகின்றார். மேலும் அவரது உள்ளம் ஒரு படைப்பினத்திற்கு படைத்தவனின் மேல் இருக்க வேண்டிய அன்பால் நிறைந்து விடுகின்றது. நாவினால் அவர், என் இறைவா! உலகில் பலதரப்பட்ட சமுதாயங்கள் எந்தெந்த முறைகளிலெல்லாம் தனது வணக்கத்தை வெளிப்படுத்துகின்றனவோ உன் முன் அந்த அனைத்து முறைகளையும் ஒன்றுகூட்டி எனது வணக்கத்தை வெளிப்படுத்துகின்றேன் என்று வாக்குமூலம் கூறுகிறார். இந்த காட்சி தொழக்கூடியவருக்கு மட்டுமின்றி அதனை பார்ப்பவர்களின் உள்ளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி அல்லாஹ்வின் பக்கம் குனியவைத்து விடுகின்றது.

## தொழுகை துஆக்களின் சங்கமமாகும்

இஸ்லாம் தொழுகையின் குறிக்கோளை அடைய இரண்டாவது அடிப்படையாக துஆவை தொழுகையின் சத்தாக ஆக்கியுள்ளது. நபி மொழியில் உள்ளது,

اَلدُّعَاءُ مُخُّ الْعِبَادَةِ

அத்துஆவு முக்குல் இபாததி - துஆ தொழுகையின் சத்தாகும். (திர்மிதி, கிதாபுத் தஃவாத், பாபு மா ஜாஅ ஃபீ ஃபஸ்லித் துஆ)

துஆ தனக்குள் எப்படிப்பட்ட காந்த சக்தியைக் கொண்டுள்ளது என்றால், அது ஒருபுறம் அடியானை அல்லாஹ்வின் அருகே கொண்டு சென்று விடுகின்றது. மறுபுறம் அவன் பாவங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் விதத்திலான எளிமைகளைக் கொண்டு சேர்த்து விடுகின்றது. நமது வேண்டுதல்களையும் மன்றாடல்களையும் பெற்றோரும் உலக அதிகாரிகளும் ஏற்றுக் கொள்கின்றார்கள் எனும்போது இரக்கம் காட்டுபவர்கள் அனைவரையும் விட அதிகம் இரக்கம் காட்டுபவனாகிய அல்லாஹ் தனது அடியார்களின் துஆக்களை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவான் என்று எவ்வாறு எண்ண முடியும்?

ஆகவே தொழுகை என்பது என்ன? அது துஆக்களின் ஒரு தொகுப்பு ஆகும். அதனால் ஒருபுறம் அல்லாஹ்வின் மீது அன்பு பிறக்கின்றது. மறுபுறம் துஆக்கள் ஏற்றுக்கொள்ளுதலை அடைந்து மனிதனின் நேர்வழி மற்றும் முன்னேற்றத்தின் காரணியாக ஆகிவிடுகின்றன.

## அல்லாஹ்வுடன் தொடர்பு

மூன்றாவது வழிமுறையாக இறைவனது ஆற்றல்களை அறிந்து கொள்ளவேண்டும் என்று இஸ்லாம் கூறியுள்ளது. ஏனென்றால் ஒரு பொருளைப் பற்றிய முழுமையான அறிவு மனிதனுக்குக் கிடைக்காத வரை அதனுடன் அவனது தொடர்பு முழுமையடைய முடியாது. உதாரணமாக எந்த மனிதனுக்குக் கல்வியின்

சிறப்பு தெரிவதில்லையோ அவன் அதனைப் பெறுவதற்கு முயற்சிக்க மாட்டான். இதைப்போன்றே எந்த மனிதன் விஷத்தின் விளைவைப் பற்றி அறிவதில்லையோ அவன் விஷத்திற்கு அஞ்ச மாட்டான். எனவே அல்லாஹ்வுடன் தொடர்பு வைக்கவும் தீமைகளிலிருந்து விலகவும் அல்லாஹ்வைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அதற்காக இஸ்லாம் தொழுகையில் எப்படிப்பட்ட சொற்களை படிப்பதை அவசியமாக வைத்துள்ளது என்றால் அவற்றின் மூலமாக மனிதனுக்கு அல்லாஹ் முழுமையான வல்லமை மிக்கவனாகவும் அன்பு கொள்ளத் தகுதியானவனாகவும் விளங்குகின்றான் என்பது வெளிப்படுகின்றது. அவன் மெய்மறந்தவாறு அவனது சந்நிதியில் விழுந்து விடுகின்றான். அவனது உள்ளம் அன்பாலும் அச்சத்தாலும் நிறைந்து விடுகின்றது. ஏனென்றால் அவனுக்கு முன்னால் ஒரே நேரத்தில் அல்லாஹ்வின் பேரருள்கள் முன்வைக்கப்படும்போது மேலும் கட்டுப்படாமை மற்றும் இறைதொடர்பை துண்டித்துக் கொள்ளுதலின் விளைவுகள் உணர்த்தப்படும் போது அவன் மீது எப்படிப்பட்ட ஒரு தனிமை நிலை சூழ்ந்து விடுகின்றது என்றால் தன்னிலை மறந்து அல்லாஹ்வின் அருகில் நெருங்கி விடுகின்றான்.

ஆகவே தொழுகையின் பொருளின் மூலமாக இவ்விஷயம் எந்த அளவிற்கு கவனத்தில்

கொள்ளப்பட்டுள்ளது என்றும், எவ்வாறு தொழுகையில் மனிதனுக்கு இறைவனின் தூய மற்றும் குறையற்ற இருப்பை அறிமுகப்படுத்தி அவனது உள்ளத்தை இறையன்பால் நிறைத்து, தீமையிலிருந்து தப்பிப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் வாசகர்கள் தெரிந்து கொள்ள முடியும். இதற்கான உதாரணம் வேறு எந்த மார்க்கத்திலும் காணக் கிடைக்காது. இஸ்லாம் கூறியுள்ள இறைவணக்க வழிமுறை எப்படிப்பட்ட முழுமையான வழிமுறை என்றால், தேவைக்கேற்ப உள்ள வழிமுறை என்றால் எந்த மார்க்கத்தாலும் இதனுடன் போட்டியிட முடியாது. ஒரு மனிதர் இஸ்லாத்தின் இந்த இறைவணக்கத்தை ஆழமாக ஆய்வு செய்தால் இஸ்லாத்திற்கு ஏனைய மார்க்கங்களின் மீது எந்த அளவிற்குச் சிறப்பு உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். என்னால் இத்தலைப்பில் விரிவாக எழுத முடியாது என்பது வருத்தமாக உள்ளது. ஏனென்றால் இந்த குறுகிய கட்டுரையின் மூலமாக தொழுகையை நிறைவேற்றும் முறையை கூறுவதே எனது நோக்கமாகும்.

## உளூ செய்யும் முறை

தொழுகையை தொடங்கும் முன்பாக ஒரு முஸ்லிம் என்ன செய்ய வேண்டும்? தொழுகையை நிறைவேற்ற ஒரு முஸ்லிம் நிற்கும் போது அவருக்கு ஓர் ஆயத்தம் செய்ய வேண்டியுள்ளது. அது உளூ என்று கூறப்படுகின்றது. உளூ இவ்வாறு செய்யப்படுகின்றது: முதலில் கைகளைக்

கழுவிக் கொள்ள வேண்டும். பிறகு மூன்று முறை வாய் கொப்பளிக்க வேண்டும். பிறகு மூன்று முறை மூக்கினுள் தண்ணீர் செலுத்தி சுத்தப்படுத்த வேண்டும்.

அதன் பிறகு மூன்றுமுறை கைகளில் தண்ணீர் எடுத்து முகத்தைக் கழுவ வேண்டும். அதன் பிறகு முதலில் வலது கையையும் பிறகு இடது கையையும் மூட்டுவரை கழுவ வேண்டும். பிறகு கைகளை நனைத்துக்கொண்டு மூன்று விரல்களால் தலை மீது தடவிக்கொள்ள வேண்டும். இதன்பிறகு ஆட்காட்டி விரலால் காதுக்குள்ளும் பெருவிரலால் காதின் வெளிப்பகுதியையும் தடவிக் கொள்ள வேண்டும். பிறகு முதலில் வலது காலையும் அடுத்து இடது காலையும் கழுவிக்கொள்ள வேண்டும். இந்த அனைத்து செயல்களும் உளூ[1] என்று கூறப்படுகின்றது. மேலும் இது தொழுகைக்கு முன்பு கட்டாயமானதாகும்.

***1.*** *உளூ செய்வதன் ஒரு நோக்கம் என்னவென்றால், பொதுவாக திறந்திருக்கும் அந்த உறுப்புக்களைக் கழுவி வெளிப்படையாக தூய்மையாக்கி இறை வணக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். இறைவணக்கத்தில் வெளிப்படையான தூய்மை இந்த அளவிற்கு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கும் போது உட்புறமான தூய்மையை ஒரு முஸ்லிம் எந்த அளவிற்கு கவனத்தில் கொள்ள வேண்டும்; எவ்வாறு தனது உள்ளத்தை பாவங்களிலிருந்து தூய்மையாக்கியவாறு அல்லாஹ்வின் சந்நிதியில் செல்ல வேண்டும் என்பது இதன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.*

# தொழும் முறை

உளூ செய்த பிறகு முஸ்லிம் கஅபாவை நோக்கி முகம் திருப்பியவாறு நிற்க ஆரம்பித்து விடுகின்றார்.[2] மேலும் اَللّٰهُ اَكْبَرُ (அல்லாஹு அக்பர் - அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறி தனது இரண்டு கைகளையும் காதுகள் வரை உயர்த்தி தனது நெஞ்சின் மீது வைத்துக் கொள்கின்றார். வலது கை இடது கையின்மேல் வைக்கப்படுகின்றது. வலது கையின் விரல்களால் இடது கையின் மணிக்கட்டின் அருகே பிடித்துக் கொள்கின்றார்.

---

*2. கஅபாவை நோக்கி முகந்திருப்புவது முஸ்லிம்கள் அதனை இறைவணக்கத்திற்குரியதாகக் கருதுகிறார்கள் என்பதற்காக அல்ல. மாறாக ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் கஅபாவைக் கட்டும் வேளையில், என் இறைவா! இந்நாட்டில் அவர்களை நேர்வழிப்படுத்தி அவர்களைத் தூய்மைப்படுத்தும் ஒரு தூதரை எழுப்புவாயாக என்று துஆ செய்தார்கள். அந்தத் தூதர் தாமே என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாதமாகும். எனவே அந்த வாக்குறுதி முஸ்லிம்களுக்கு நினைவுக்கு வந்துகொண்டிருக்க வேண்டும்; அவர்கள் தமது செயல்களை சரிசெய்து கொண்டிருக்க வேண்டும் என்பதே தொழுகையில் அதன் பக்கம் முகந்திருப்பிக் கொள்வதன் ஞானமாகும். அவ்வாறு இல்லை எனில் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:*

لَيْسَ الْبِرَّ اَنْ تُوَلُّوْا وُجُوْهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَلٰكِنَّ الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ

وَالْمَلٰٓئِكَةِ وَالْكِتٰبِ وَالنَّبِيّٖنَ ۚ وَاٰتَى الْمَالَ عَلٰى حُبِّهٖ ذَوِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنَ وَابْنَ

அந்த நேரத்திலிருந்து தொழுது முடிக்கும் முடிவடையும் வரை அவர் எவருடனும் பேசுவது அல்லது அங்குமிங்கும் பார்ப்பது அல்லது தனது இடத்திலிருந்து நகர்வது தடுக்கப்பட்டுள்ளது. கைகளை நெஞ்சின்மீது வைத்தபிறகு அவர் இவ்வாறு கூறுவார்:

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالٰى جَدُّكَ وَلَآ إِلٰهَ غَيْرُكَ

ஸுப்ஹானகல்லாஹும்ம வபி ஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கைருக்க.

---

السَّبِيْلِ ۙ وَ السَّآىِٕلِيْنَ وَ فِی الرِّقَابِ ۚ وَ اَقَامَ الصَّلٰوةَ وَ اٰتَی الزَّكٰوةَ ۚ وَ الْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا ۚ وَ الصّٰبِرِیْنَ فِی الْبَاْسَآءِ وَ الضَّرَّآءِ وَ حِیْنَ الْبَاْسِ ؕ اُولٰٓىِٕكَ الَّذِیْنَ صَدَقُوْا ؕ وَ اُولٰٓىِٕكَ هُمُ الْمُتَّقُوْنَ۝

*"கிழக்கு, மேற்கு ஆகியவற்றின் பக்கமாக உங்கள் முகங்களைத் திருப்புதல் நன்மையன்று. (அதாவது, கஅபாவை நோக்கி முகந்திருப்புதலை நன்மை என்று கருதாதீர்கள்) ஆயினும் அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், வானவர்களிடத்தும், இறைவேதத்திடத்தும், எல்லா நபிமார்களிடத்தும் எவர் நம்பிக்கை கொண்டு அவன் (அல்லாஹ்) மேல் கொண்டுள்ள நேசத்தால் உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும் அடிமைகளுக்கு (விடுதலை அளிப்பதற்கு)ம் தமது பொருளைச் செலவு செய்து, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத் கொடுகின்றாரோ அவரே உண்மையில் மிக நல்லவர் ஆவார். மேலும் வாக்குறுதி அளித்தால் தாங்கள் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றுபவர்களும்,*

பொருள்: அல்லாஹ்வே! நீ தூயவனாக இருக்கின்றாய். புகழ்ந்துரைக்க தகுதியுடையவனாக இருக்கின்றாய். உனது பெயர் அருளுக்குரியது. உனது மகத்துவம் மிகவும் உயர்ந்ததாகும். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவருமில்லை.

இதன் பிறகு அவர் இவ்வாறு கூறுகின்றார்:

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அவூது பில்லாஹி மினஷ் ஷய்தானிர் ரஜீம்[3]

பொருள்: அல்லாஹ்வின் சந்நிதியிலிருந்து தூரமாக எறியப்பட்ட ஷெய்த்தானிடமிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

இதன் பிறகு தொழுகையாளி திருக்குர்ஆனின் முதல் அதிகாரத்தை ஓதுகின்றார். அது சூரா ஃபாத்திஹா என்று அழைக்கப்படுகிறது. அது இதுவாகும்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا

---

*வறுமையிலும், நோயிலும், போர் வேளையிலும் பொறுமையுடன் இருப்பவர்களும் (நல்லவர்கள்) ஆவர். இவர்களே உண்மையாளர்கள். மேலும் இவர்களே இறையச்சம் உடையோர்கள்' திருக்குர்ஆன் 2:178)*

*-நூலாசிரியர்.*

*3. திருக்குர்ஆனின் ஏதேனும் பகுதியை ஓதுவதற்கு முன்பாக இந்த துஆவை ஓதுமாறு கட்டளை உள்ளது.*

الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝٦ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝٧

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். அர்ரஹ்மானிர் ரஹீம். மாலிக்கி யவ்மித்தீன். இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தயீன். இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம், கைரில் மக்ழூபி அலைஹிம் வலல் ழால்லீன்.

பொருள்:

உழைப்பின்றி வழங்கக்கூடியவனும் (அதாவது, சூரியனின் ஒளி அல்லது காற்று போன்றவை), எவரது உழைப்பையும் வீணாக்காதவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் நான் தொடங்குகின்றேன். அனைத்து படைப்பினங்களையும் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ்வே அனைத்துவித புகழ்களுக்கும் உரியவனாவான் என நான் ஒப்புக் கொள்கின்றேன். அவன், உழைப்பின்றியும் அருள்பாலிக்கின்றான். மேலும் உழைப்பின் கூலியையும் அதிகமதிகமாகத் தருகின்றான். அவன் எவரது உழைப்பையும் வீணாக்குவதில்லை.

நன்மை மற்றும் தீமையின் விளைவுகள் அவனது கட்டளையின் கீழ்தான் வெளிப்படுகின்றன. மேலும் (நான் கூறிக்கொள்வதாவது, மேலே நான் கூறிய என் இறைவனே!) நாங்கள் உனக்கே

கட்டுப்படுகின்றோம். உன்னிடமே எங்களின் ஒவ்வொரு பணியிலும் உதவி கேட்கின்றோம். நீ எங்களுக்கு ஒவ்வொரு பணியிலும் நேர்வழியைக் காட்டுவாயாக. எவர்கள்மீது உனது அருள் பொழிந்துள்ளதோ அந்த மக்களின் வழியைக் காட்டுவாயாக. நாங்கள் உனது அன்பிற்குரியவர்களாக ஆகிய பின்னரும் ஏதேனும் காரணத்தால் உனது கோபத்தை எங்கள் மீது தூண்டக் கூடியவர்களாகவோ அல்லது நாங்களே உன்னை விட்டு விட்டு அங்குமிங்கும் கவனம் செலுத்துமாறும் செய்து விடாதே.[4]

---

*4. ஒவ்வொரு மார்க்கமும் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கென ஓர் இலக்கை நிர்ணயித்துள்ளது. ஆனால் இஸ்லாத்தின் இலக்கு அனைத்தையும் விட மிகவும் உயரியதாகும். அதனுடன் எதுவும் போட்டியிட முடியாது. ஏனென்றால் இந்த துஆவில் முஸ்லிம்களுக்கு,* صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ *ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் எனும் துஆ செய்யுமாறு வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது அருள்புரியப்பட்ட மக்களுக்கு கிடைத்த அதே படித்தரத்தை தங்களுக்கும் வழங்குமாறு அல்லாஹ்விடம் அவர்கள் துஆ கேட்க வேண்டும். இன்னோரிடத்தில் திருக்குர்ஆன் அருள் புரியப்பட்ட மக்களைப் பற்றி கூறும்போது அவர்கள் நபிமார்கள், சித்தீகுகள், ஷஹீதுகள், சாலிஹூகள் ஆவர் என்று கூறுகின்றது. திருக்குர்ஆனில் இன்னோரிடத்தில் உள்ளது:*

وَ اِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ يٰقَوْمِ اذْكُرُوْا نِعْمَةَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ جَعَلَ فِيْكُمْ اَنْۢبِيَآءَ وَ جَعَلَكُمْ مُّلُوْكًا ۖۗ وَّاٰتٰكُمْ مَّا لَمْ يُؤْتِ اَحَدًا مِّنَ الْعٰلَمِيْنَ ۝

**இந்த அதிகாரத்தை ஓதிய பிறகு 'ஆமீன்' அதாவது இறைவா! எனது இந்த துஆவை ஏற்றுக்கொள்வாயாக என்று முஸ்லிம் கூறுகின்றார்.**

*வ இத்கால மூஸா லிகவ்மிஹீ யா கவ்மித்குரூ நிஃமதல்லாஹி அலைக்கும் இத் ஜஅல ஃபீக்கும் அம்பியாஅ வ ஜஅலகும் முலூக்கன்வ் வ ஆதாக்கும் மா லம் யுஃத்தி அஹதம் மினல் ஆலமீன்.*

***(திருக்குர்ஆன்: 5:21)***

*பொருள்: அப்போது மூஸா தமது சமுதாயத்தினரிடம் இவ்வாறு கூறினார்; உங்களிலிருந்து நபிமார்களை அனுப்பியும் உங்களுக்கு அரசாட்சியை வழங்கியும் வேறு எவருக்கும் வழங்காததை உங்களுக்கு வழங்கிய அல்லாஹ்வின் அருளை (அதாவது அந்நேரத்தை) நினைவு கூருங்கள்.*

*இதேபோன்று வேறு இடங்களிலும் அருள் செய்யப்பட்டவர்கள் என்பதன் பொருள் நபிமார்களேயாகும் என்பதைக் கூறியுள்ளான்.*

*எனவே இஸ்லாம் ஒவ்வொரு முஸ்லிமின் இறுதி இலக்காக நபித்துவத்தை வைத்துள்ளது. அதாவது அவரையும் அல்லாஹ் நபிமார்களின் கூட்டத்தில் நுழைப்பானாக என்று அவர் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். இது எப்படிப்பட்ட இலக்கு என்றால் இதனை வேறு எந்த மார்க்கமும் நிர்ணயிக்கவில்லை. மாறாக ஒவ்வொரு மார்க்கமும் இறையறிவிப்பின் வாசலை அடைத்துவிட்டது. ஆனால் இஸ்லாம் மட்டுமே தன்னைப் பின்பற்றுபவர்களிடம், இறையறிவிப்பின் வாசல் அடைக்கப்பட முடியாது. ஒரு காலத்தில் பேசிக் கொண்டிருந்த இறைவன், இஸ்ரவேலர்களின் ஆண்கள் மற்றும் பெண்களிடம் பேசி வந்தவன் இப்போது தனது படைப்பினங்களின் நேர்வழியை அடைத்துவிட்டான்;*

**இந்த அதிகாரத்தை ஓதிய பிறகு 'ஆமீன்' அதாவது இறைவா! எனது இந்த துஆவை ஏற்றுக்கொள்வாயாக என்று முஸ்லிம் கூறுகின்றார்.**

---

*பேசுவதை நிறுத்திக்கொண்டான் என்பது சாத்தியமேயில்லை என்று போதிக்கின்றது. மேலும் இது எப்படிப்பட்ட இலக்கு என்றால், துணிவுள்ள மனிதனை இது முன்னேற்றத்தை நோக்கி மேன்மேலும் உயர்த்திக் கொண்டே செல்கின்றது. எந்த குறுகிய சிந்தனையுமின்றி அவனது பார்வை, அரசனுக்கெல்லாம் அரசனாகவும் முழுமையான அன்பின் எஜமானனாகவும் இருக்கும் அந்த வானத்தையும் பூமியையும் படைத்தவனிடம் நான் நேரடியாக பேசமுடியும் என்பதாக இருக்கின்றது. முஸ்லிம்கள் இதே இலக்கை மையப்படுத்தி எப்போதும் அல்லாஹ்வுடன் நேரடியாக தொடர்பைப் பெற்ற முன்மாதிரியை நிலை நாட்டியுள்ளார்கள். இறையறிவிப்பைப் பெறும் ஒரு மாபெரும் மகானைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பும் செய்துள்ளார்கள். அவரது பெயரை அன்னார் மஹ்தி என்றும் மஸீஹ் என்றும் வைத்துள்ளார்கள்.*

*மஹ்தி என்ற பெயர் எதன் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளது என்றால், இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மையை மறந்து வழிகேட்டில் விழுந்து விடக் கூடிய அவர்களின் செயல்களையும் பேச்சையும் பார்த்து, எந்த மனிதராலும் இஸ்லாத்தின் சிறப்புகளை அறிய முடியாத அக்கால முஸ்லிம்களை அவர் நேர்வழிப்படுத்துவார்.*

*மஸீஹ் என்ற பெயர் எதனடிப்படையில் என்றால் அவர் மஸீஹின் இரண்டாம் வருகையின் முன்னறிவிப்பை நிறைவேற்றுவார். மஸீஹின் உண்மையான போதனையை கைவிட்டு விட்ட கிறித்தவ உலகை நேர்வழியில் கொண்டு வருவார். இதன்படி அந்த மகான் இந்தியாவில் காதியான் எனும் இடத்தில் தோன்றியும் விட்டார்.*

**இதன் பிறகு தொழுபவர் திருக்குர்ஆனின் ஏதேனும் ஒரு பகுதியை ஓதுகின்றார்.**

*அவர் தமது வாதத்தின் 30 ஆண்டுகால வாழ்வில், இறைவனின் புத்தம் புதிய இறை அடையாளங்களினால் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை நிரூபித்து விட்டார். அவர் வழங்கிய ஆன்மீகப் பயிற்சியால் இவ்வேளையில் அவரைப் பின்பற்றிய ஆயிரக்கணக்கான சீடர்கள் இறையறிவிப்பின் நற்பேற்றைப் பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர் தமது ஜமாஅத்தில் பிரச்சாரத்தின் எப்படிப்பட்ட ஆன்மாவை தோற்றுவித்து விட்டார் என்றால் அவர்கள் மிக விரைவில் உலகை தம்முடன் இணைத்துக் கொண்டு விடுவார்கள்.*

*உண்மையில், இறையறிவிப்பு எல்லா காலங்களிலும் தொடர்கின்றது எனும் அறிவிப்பு எப்படிப்பட்ட ஓர் ஊக்கமளிக்கக் கூடிய நற்செய்தி என்றால் இதன் காரணத்தால் ஓர் உண்மையான முஸ்லிமின் மன தைரியம் ஒருபோதும் தோற்றுப்போவதில்லை. மேலும் இவ்விஷயம் பல்வேறு மார்க்கங்களிடையே தீர்ப்பளிக்க ஓர் எளிமையான வழியாகும்.*

*ஏனென்றால் எப்போதும் கனிகளை வழங்கக்கூடியதே உண்மையான மார்க்கமாக இருக்க முடியும். மேலும் மார்க்கத்தின் கனி என்பது இறையறிவிப்பேயாகும். எனவே இஸ்லாம் தன்னைப் பின்பற்றுவர்களின் பார்வை எல்லையைப் பிற மார்க்கங்களோடு ஒப்பிடுகையில் மிக உயர்ந்ததாக வைத்துள்ளது. அது இயல்பின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்றது. இறைவன் இருக்கின்றான் என்றால் ஏன் எவரிடமும் பேசுவதில்லை என்பதே மார்க்கங்களின் மீதான நாத்திகவாதிகளின் மிகப் பெரிய ஆட்சேபனையாக இருக்கின்றது.*

*ஆனால் இந்த ஆட்சேபனையை அவர்களால் இஸ்லாத்தின்மீது செய்ய முடியாது. ஏனென்றால் அது பழங்கதைகளைக் கூறுவதில்லை. மாறாக இப்போதும்*

அது குறைவாக இருந்தாலும், அதிகமாக இருந்தாலும் சரியே![5]

பிறகு அவர் கைகளை அவிழ்த்தவாறு அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறியவாறு அவரது தலையும் முதுகும் சீராக இருக்கும்படி குனிகின்றார். மேலும் அவர் தனது கைகளால் கால்களின் மூட்டுகளைப் பிடித்துக்கொள்கின்றார். குறைந்தது மூன்று முறை

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمُ

சுப்ஹான ரப்பியல் அழீம் - பெரும் மகத்துவமுள்ள எனது இறைவன் தூயவனாவான் என்ற சொற்களைக் கூறுகின்றார். பிறகு,

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ

ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா

---

*இக்காலத்தின் இமாம் மற்றும் சீர்திருத்தவாதியின் மூலமாக மார்க்கப் பயிற்சி வழங்கப்பட்ட, இறைவனிடமிருந்து இறை அறிவிப்பைப் பெறக் கூடியவர்கள் இருக்கின்றார்கள். எவராவது அந்த மஸீஹ் மற்றும் மஹ்தியின் நிலைகளைப் பற்றி மேலும் அதிகமாக அறிந்துகொள்ள விரும்பினால் நாம் மிகுந்த மகிழ்சியுடன் அதற்குத் தயாராக உள்ளோம். அவர் இந்த முகவரியில் கடிதத்தொடர்பு கொள்ளவும்: மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது. காதியான், குர்தாஸ்பூர் மாவட்டம். - நூலாசிரியர்*

***5.*** *நாம் திருக்குர்ஆனின் சில பகுதிகளைத் தனியாக ஓரிடத்தில் முழுத் திருக்குர்ஆனையும் ஓத தெரியாதவர்களுக்காக அவர்கள் தொழுகையில் ஓதும்பொருட்டு கொடுத்துள்ளோம்.*

அல்லாஹ்வைப் புகழ்பவரின் துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான் என்ற சொற்களைக் கூறியவாறு எழுந்து நின்று தனது கைகளைத் தொங்கவிட்டுக் கொள்கின்றார். பிறகு;

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ حَمْدًا كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ

ரப்பனா வலகல் ஹம்து. ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹி.

எங்கள் இறைவா! நீ சிறப்புமிக்கவனும், தூய்மையும் அருளும் மிகுதியாக இருக்கும் சிறப்புகளைக் கொண்டவனுமாவாய் என்று கூறுகின்றார். பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறியவாறு சஜ்தாவில் விழுந்து விடுகின்றார். அதில் குறைந்தது மூன்று முறை

سُبْحَانَ رَبِّيَ الْأَعْلٰى

சுப்ஹான ரப்பியல் அஃலா - மேன்மைமிக்க எனது இறைவன் தூயவனாவான் என்ற சொற்களைக் கூறுகின்றார். பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறியவாறு எழுந்து முழங்காலிட்டு அமர்ந்து கொள்கின்றார். வலது காலை விரல்களின் மீது குத்தி நிறுத்தி வைத்துக் கொள்கிறார். ஆனால் இடது காலை தரையில் சாய்த்து வைத்து அதன் மீது அமர்ந்து கொள்கின்றார். மேலும் அவர் இவ்வாறு கூறுகின்றார்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ وَاهْدِنِيْ وَعَافِنِيْ وَارْفَعْنِيْ وَجْبُرْنِيْ وَارْزُقْنِيْ

அல்லாஹும்ம மக்ஃஃபிர்லீ, வர்ஹம்னீ, வஹ்தினீ, வ ஆஃஃபினீ, வர்ஃஃபஃஃனீ, வஜ்புர்னீ, வர்ஸுக்னீ.

அல்லாஹ்வே! என் பாவங்களை மன்னிப்பாயாக. என் மீது கருணை காட்டுவாயாக. எனக்கு நேர்வழி காட்டுவாயாக. ஒவ்வொரு தீங்கிலிருந்தும் பாதுகாப்பாயாக. எனக்கு கண்ணியம் வழங்குவாயாக. என்னை சீர் திருத்துவாயாக. எனக்கு ரிஸ்க் வழங்குவாயாக.

இதன் பிறகு மீண்டும் அல்லாஹு அக்பர் என்று கூறியவாறு சஜ்தாவிற்குச் சென்று முன்பு சஜ்தாவில் கூறிய அதே சொற்களைக் கூறுகின்றார். பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி எழுந்து நின்று கொள்கின்றார். (இதுவரை முடிந்துள்ள தொழுகை ஒரு ரக்அத் எனக் கூறப்படுகின்றது. தொழுகைகள் இரண்டு ரக்அத்தைக் கொண்டவையாகவும் சில மூன்று ரக்அத்தைக் கொண்டவையாகவும் சில நான்கு ரக்அத்தைக் கொண்டவையாகவும் இருக்கின்றன.) எவ்வாறு முதல் ரக்அத்தை தொழுதாரோ அவ்வாறே மீண்டும் (அடுத்த ரக்அத்தில்) தொழுகின்றார்.

ஆனால் முதல் ரக்அத்தில் ஓதிய سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ ஸுப்ஹானக் கல்லாஹும்ம வபிஹம்திக.... என்பதை ஓதாமல் சூரா ஃபாத்திஹாவுடன் தொடங்குகிறார். அதன் பிறகு திருக்குர்ஆனின் ஏதேனும் ஒரு பகுதியை ஓதுகின்றார். பிறகு அனைத்தையும் முதல் ரக்அத்தில் செய்தவாறே செய்கின்றார். இரண்டாவது ரக்அத்தின் இரண்டு

சஜ்தாக்களையும் செய்து முடித்தபின் முதல் ரக்அத்தைப் போன்று எழுந்து நின்று விடாமல் இரண்டு சஜ்தாக்களின் நடுவே முழங்காலிட்டு அமர்ந்து கொண்டதைப் போன்று அமர்ந்து கொண்டு இந்த துஆவை ஓதுகின்றார்.

## தஷஹ்ஹுது

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ

وَبَرَكَاتُه‘ اَلسَّلاَمُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَ

أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُه‘ وَرَسُوْلُه‘

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு

பொருள்: நாவினாலும் உடலினாலும் பொருளினாலும் செய்கின்ற அனைத்து இறை வணக்கங்களும் அல்லாஹ்விற்கே உரியனவாகும். (அதாவது அல்லாஹ்வைத் தவிர வேறெதனையும் எந்த வகையிலும் வணங்கி விடக்கூடாது). நபியே! (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உங்கள் மீது அல்லாஹ்வின் புறமிருந்து சாந்தியும் அவனது ரஹ்மத்தும் பரக்கத்தும் (அதாவது அபிவிருத்தி) இறங்குவதாக. மேலும் எங்கள் மீதும் சாந்தி இறங்கட்டுமாக. அல்லாஹ்வின்

நல்லடியார்கள் அனைவர் மீதும் சாந்தி இறங்கட்டுமாக. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு எந்த இணையும் இல்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன். முஹம்மது (ஸல்) அவனது தொண்டரும் அவனால் படைக்கப்பட்டவரும் ஆவார் (இறைவனும் இல்லை, அவனது மகனும் இல்லை) அவனது ஒரு தூதராவார் என நான் சாட்சி கூறுகின்றேன்.[6] இப்பகுதி தஷஹ்ஹுது எனக் கூறப்படுகின்றது.

## தரூத் ஷரீஃப்

இதன் பிறகு அவர் அவ்வாறே அமர்ந்து கொண்டு இதனை ஓதுகின்றார்:

---

*6. ஒவ்வொரு சமுதாயமும் தனது ரஸூலை இறைவனாகவோ அல்லது அவனது இணையாகவோ அல்லது அவனது மகனாகவோ ஆக்கிக் கொண்டுவிடும் அளவிற்கு கண்ணியத்தை வழங்கி விட்டது. எனவேதான் இஸ்லாம் அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கு சாட்சி கூறுவதுடன் தான் படைக்கப்பட்டவன் என்று சாட்சி கூறுவதையும் தன்னை பின்பற்றும் ஒவ்வொருவர் மீதும் கடமையாக்கியுள்ளது.*

*இதனால் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களும் தமது இறை தூதரை இறைவனாகவோ அல்லது அவனது மகனாகவோ கருதாமல் தங்களின் ரஸூல் அல்லாஹ்வின் ஓர் அடியார் ஆவார் என்று தங்களின் இறைவணக்கத்தில் சாட்சி கூறிக் கொண்டிருக்க வேண்டும். ஆயினும் பல ரஸூல்மார்களைப் போன்று அன்னாரும் ஒரு ரஸூலாக இருந்தார்கள் எனும் தனிச்சிறப்பை அன்னார் பெற்றிருந்தார்கள்.*

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

அல்லாஹு்ம்ம ஸல்லி அலா முஹம்மதிவ் வ அலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது. அல்லாஹு்ம்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது.

பொருள்: அல்லாஹ்வே! இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களை பின்பற்றியவர்களின் மீதும் அருள் புரிந்ததைப் போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களை உண்மையாக பின்பற்றுபவர்கள் மீதும் அருள் புரிவாயாக. நீ பெரும் புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனுமாவாய்.

அல்லாஹ்வே! இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாலம் அவர்களையும் அவர்களைப் பின் பற்றியவர்களையும் அந்தஸ்தில் உயர்த்தியதைப் போன்று முஹம்மது (ஸல்) அவர்களையும் அவர்களை உண்மையாகப் பின்பற்றுபவர்களையும், அந்தஸ்தில் உயர்த்துவாயாக. நீ பெரும் புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனுமாவாய்.

இப்பகுதி தரூத் எனப்படுகிறது.

## துஆக்கள்

பிறகு அதே நிலையில் அமர்ந்திருந்தவாறு இந்த துஆக்களையோ அல்லது இவற்றில் ஏதேனும் துஆவையோ ஓதுகின்றார்:

(1) اَللّٰهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ظُلْمًا كَثِيْرًا وَلَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ فَاغْفِرْ لِيْ مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِيْ إِنَّكَ أَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ

அல்லாஹும்ம இன்னீ ழலம்து நஃப்ஸீ ழுல்மன் கஸீரன் வலா யக்ஃபிருத்துனூப இல்லா அன்த. ஃபக்ஃபிர்லீ மக்ஃபிரத்தம் மின் இந்திக வர்ஹம்னீ இன்னக அன்தல் கஃபூருர் ரஹீம்.

(புகாரி கிதாபுத் தஃவாத். பாபுத் துஆ ஃபிஸ்ஸலாத்)

பொருள்: அல்லாஹ்வே! நான் எனது ஆன்மாவின் மீது அதிக அநீதியிழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் எவரும் இல்லை. எனவே நீ உனது கருணையால் என்னை மன்னிப்பாயாக. என் மீது கருணை காட்டுவாயாக. நீ மிக்க மன்னிப்பவனும் கருணை காட்டுபவனுமாவாய்.

(2) اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْغَمِّ وَاَعُوْذُبِكَ مِنَ الْجُبْنِ وَالْبُخْلِ وَاَعُوْذُبِكَ مِنَ الْعَجْزِ وَالْكَسَلِ وَاَعُوْذُبِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ وَقَهْرِ الرِّجَالِ

அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மினல் ஹம்மி வல் கம்மி வ அவூதுபிக மினல் ஜுப்னி வல் புக்லி வ அவூதுபிக மினல் அஜ்ஸி வல் கஸலி வ அவூதுபிக மின் கலபத்தித் தைனி வ கஹ்ரிர் ரிஜால்.

பொருள்: அல்லாஹ்வே! நான் உன்னிடம் கவலையிலிருந்தும் துக்கத்திலிருந்தும் பாதுகாப்பு வேண்டுகின்றேன். உன்னிடம் கோழைத்தனத்திலிருந்தும் கருமித்தனத்திலிருந்தும் பாதுகாப்பு தேடுகின்றேன். உன்னிடம் நான், எனது பணிகளினால் பொருள் ஈட்ட முடியாமல் இருப்பதிலிருந்தும், பொருள் இருந்தும் நான் அதிலிருந்து பயன் பெற முடியாமல் இருப்பதிலிருந்தும் பாதுகாப்பு தேடுகின்றேன். நான் உன்னிடம், திருப்பி செலுத்த முடியாத கடனாளியாவதிலிருந்தும் பாதுகாப்பு தேடுகின்றேன். நான் உன்னிடம், எனது சுதந்திரம் பறிக்கப்பட்டு வேறு ஒருவர் என் மீது கொடுங்கோல் ஆட்சி புரிவதிலிருந்தும் பாதுகாப்பு தேடுகின்றேன்.

**(3)** رَبِّ اجْعَلْنِيْ مُقِيْمَ الصَّلٰوةِ وَمِنْ ذُرِّيَّتِيْ ۖ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ

ரப்பிஜ்அல்னீ முகீமஸ் ஸலாத்தி வமின் துர்ரிய்யத்தீ ரப்பனா வதகப்பல் துஆ. (திருக்குர்ஆன் 14:41)

பொருள்: என் இறைவா! எனக்கும் எனது சந்ததிகளுக்கும் தொழுகையை நிறைவேற்றும் நற்பாக்கியத்தை வழங்குவாயாக. என் இறைவா! என் துஆவை ஏற்றுக்கொள்வாயாக.

**(4)** رَبَّنَا اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ

ரப்பனக்ஃபிர்லீ வலிவாலிதய்ய வலில் முஃமினீன யவ்ம யகூமுல் ஹிஸாப். (திருக்குர்ஆன் 14:42)

**பொருள்: எங்கள் இறைவா! என்னையும் எனது பெற்றோரையும் நம்பிக்கையாளர்களையும் கேள்வி கணக்கு நிகழும் அந்நாளில் மன்னிப்பாயாக.**

**(5)** رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

**ரப்பனா ஆ(த்)தினா ஃபித்துன்யா ஹஸனதன்வ் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தவ் வகினா அதாபன்னார். (திருக்குர்ஆன் 2:202)**

**பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் மகிழ்ச்சியான வாழ்கையை வழங்குவாயாக. நரகின் தண்டனையிலிருந்து எங்களைக் காப்பாயாக.**

**இதன் பிறகு அவர்;** اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ

**அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்.**

**உங்கள் மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் உண்டாவதாக என்று கூறியவாறு வலது பக்கத்தை நோக்கி முகத்தைத் திருப்புகின்றார்.** [7]

*7. இரண்டு ரக்அத்துக்களைக் கொண்ட தொழுகையாக இருந்தால் இவ்வாறு செய்ய வேண்டும். மூன்று அல்லது நான்கு ரக்அத்துக்களைக் கொண்ட தொழுகையாக இருந்தால் தஷஹ்ஹுது கூறியவுடன் எழுந்துவிடவேண்டும். பின்பு மீதமுள்ள ஒன்று அல்லது இரண்டு ரக்அத்துக்களை தொழுது விட்டு இவ்வாறே அமர்ந்து மேலே எழுதப்பட்டுள்ள அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்ற அந்த சொற்களைக் கூற வேண்டும். கூறப்பட்டுள்ள இதே முறைப்படி தொழுகையை நிறைவு செய்யவும்.*

அவ்வாறே இதே சொற்களைக் கூறியவாறு இடது பக்கத்தை நோக்கி முகத்தை திருப்புகின்றார். அத்துடன் தொழுகை முடிவடைந்து விடுகின்றது. இதன் பிறகு அவர் விரும்பியதை செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக இந்த வழிகாட்டல்களின்படி செயல்பட்டால் இந்த தொழுகையை நிறைவேற்ற ஒரு சில நிமிடங்களே செலவாகும்.

## தொழுகையின் நேரங்கள்

தொழுகைக்கான நேரங்கள் ஐந்தாகும். முதலாவது கிழக்கு வெளுக்கும் நேரத்திலிருந்து சூரிய உதயத்திற்கு முன்னுள்ள நேரம் வரை ஒரு தொழுகை தொழப்படுகின்றது. அது இரண்டு ரக்அத்துகளைக் கொண்டதாகும். அதற்கு முன்னதாக இரண்டு ரக்அத்துகள் தனியாக தொழப்படுகின்றன.

இரண்டாவது நேரம், சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த நேரத்திலிருந்து தொடங்கி ஏறக்குறைய மூன்று மணி நேரம் வரை நீடிக்கின்றது. அந்த நேரத்தில் நான்கு ரக்அத்துகள் தொழப்படுகின்றன. அதற்கு முன்பும் அதற்குப் பிறகும் நான்கு ரக்அத்துகள் தொழுவதும் சுன்னத்தாகும்.

அதன் பிறகே அஸ்ருக்கான நேரம் தொடங்குகின்றது. அதில் நான்கு ரக்அத்துகள் தொழப்படுகின்றன. சூரியன் மறைந்த உடனேயே ஒரு தொழுகை மூன்று ரக்அத்துகளுடன் தொழப்படுகின்றது. அதன் பின் இரண்டு ரக்அத்

தொழப்படுகின்றது. சூரியன் மறைந்து ஏறக்குறைய ஒன்றரை மணி நேரத்திற்குப் பிறகு ஐந்தாவது தொழுகைக்கான நேரம் தொடங்குகின்றது. அது இஷா என்று அழைக்கப்படுகின்றது. இது நான்கு ரக்அத்துகளைக் கொண்டதாகும். அத்துடன் இரண்டு ரக்அத்தும் மேலும் மூன்று ரக்அத்தும் தொழப்படுகின்றன. இந்த தொழுகைக்கான நேரம் நடுஇரவு வரை தொடர்கின்றது. இந்த தொழுகைகள் மட்டுமின்றி முஸ்லிம்களுக்கு, நடுஇரவிற்குப் பிறகு கிழக்கு வெளுப்பதற்கு முன்பாக ஏதேனும் நேரத்தில் எழுந்து, இரண்டிரண்டு ரக்அத்துக்களாக எட்டு ரக்அத்துக்கள் தொழ வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த தொழுகை தஹஜ்ஜுத் என்று அழைக்கப்படுகின்றது. இந்த தொழுகை (ஒவ்வொரு முஸ்லிமின் மீதும்) கட்டாயக் கடமை இல்லை. விரும்பியவர் தொழுது கொள்ளலாம்.

## தொழுகையில் துஆ

தொழுகையில் முஸ்லிமிற்கு அவசியமாகிய, அரபி மொழியில் செய்யப்படுகின்ற இந்த துஆக்கள் மட்டுமின்றி தொழக்கூடியவர் தத்தமது மொழிகளில் தனது தேவைக்கேற்ப துஆக்கள் செய்து கொள்ள அனுமதி உண்டு. இந்த துஆ நிற்கும் போதும், குனியும்போதும், சஜ்தா செய்யும்போதும், அமர்ந்திருக்கும் போதும் என ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செய்யலாம்.

## ஒரு சில திருக்குர்ஆன் வசனங்கள்

சூரா ஃபாத்திஹாவுக்குப் பிறகு திருக்குர்ஆனின் ஒரு சில வசனங்களை ஓத வேண்டியது அவசியமாகும் என்று நாம் கூறியிருந்தோம். எனவே நாம் திருக்குர்ஆனின் பல்வேறு இடங்களிலிருந்து தொழுகையில் ஓதக்கூடிய ஒரு சில திருக்குர்ஆன் வசனங்களை முன்வைக்கின்றோம்.

**(1)** اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَۚ اَلْحَیُّ الْقَیُّوْمُ ۚ۬ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّ لَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ؕ مَنْ ذَا الَّذِیْ یَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ ؕ یَعْلَمُ مَا بَیْنَ اَیْدِیْهِمْ وَ مَا خَلْفَهُمْ ۚ وَ لَا یُحِیْطُوْنَ بِشَیْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِیُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا یَئُوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِیُّ الْعَظِیْمُ ۚ

அல்லாஹு லா இலாஹ இல்லாஹுவல் ஹய்யுல் கய்யூம். லா தஃஹுதுஹு சினதுன்வ் வலா நவ்ம். லஹு மாஃபிஸ் ஸமாவாத்தி வமா ஃபில் அர்ழ். மன் தல்லதீ யஷ்ஃபவு இன்தஹு இல்லா பி இத்னிஹீ யஃலமு மாபய்ன அய்தீஹிம் வமா ஹல்ஃபஹும் வலா யுஹீதூன பிஷைய்யிம் மின் இல்மிஹீ இல்லா பிமாஷா. வஸிஅ குர்ஸிய்யுஹுஸ் ஸமாவாத்தி வல் அர்ழ். வலா யவூதுஹு ஹிஃப்ழுஹுமா வஹுவல் அலிய்யுல் அழீம். **(திருக்குர்ஆன் 2:256)**

பொருள்: அல்லாஹ் - அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. அவன் உயிருடன் இருக்கின்றான். அவன் எவரது

உதவியுமின்றி சுயமாக நிலைத்து நிற்கின்றான். அவனுக்கு சிற்றுறக்கமோ தூக்கமோ வருவதில்லை. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடத்தில் எவரால் பரிந்துரை செய்ய முடியும்? மக்கள் செய்துள்ளவற்றையும், செய்ய இருப்பவற்றையும் அவன் நன்றாக அறிகின்றான். அவனது அறிவிலிருந்து எவராலும் பெற முடியாது. ஆயினும் எந்தளவிற்கு அறிவை அவன் சுயமாக வழங்குகின்றானோ அந்தளவிற்கு மனிதன் அவனைப் பற்றிய அறிவைப் பெறுகின்றான். அவனது அறிவு வானங்களிலும் பூமியிலும் பரந்து விரிந்துள்ளது. வானங்களையும் பூமியையும் பாதுகாப்பது அவனை சோர்வுக்குள்ளாக்கி விடுவதில்லை. அவன் மிக உயர்ந்தவனும் மகத்துவமிக்கவனும் ஆவான்.

(2) قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝ اَللّٰهُ الصَّمَدُ ۝ لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۝ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۝

குல்ஹுவல்லாஹு அஹது. அல்லாஹுஸ் ஸமது. லம் யலிது. வலம் யூலது. வலம் யகுல்லஹு குஃபுவன் அஹது. (திருக்குர்ஆன் 112:2-5)

பொருள்: கூறுவீராக! அல்லாஹ் ஒருவனாவான். அல்லாஹ்வின் உதவியின்றி எந்தப் பொருளாலும் நிலைநிற்க முடியாது. அவனுக்கு எந்த மகனும் இல்லை. அவன் எவருடைய

மகனும் இல்லை. அவனுக்கு நிகரானவர் எவருமில்லை.

(3) يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَسْخَرْ قَوْمٌ مِّنْ قَوْمٍ عَسٰى اَنْ يَّكُوْنُوْا خَيْرًا مِّنْهُمْ وَ لَا نِسَآءٌ مِّنْ نِّسَآءٍ عَسٰى اَنْ يَّكُنَّ خَيْرًا مِّنْهُنَّ ۚ وَ لَا تَلْمِزُوْٓا اَنْفُسَكُمْ وَ لَا تَنَابَزُوْا بِالْاَلْقَابِ ؕ بِئْسَ الِاسْمُ الْفُسُوْقُ بَعْدَ الْاِيْمَانِ ۚ وَ مَنْ لَّمْ يَتُبْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ

யா அய்யுஹல்லதீன ஆமனூ லா யஸ்கர் கவ்முன் மின் கவ்மின் அஸா அய்யகூனூ கைரம் மின்ஹும். வலா நிஸாவும் மின்னிஸாயின் அஸா அய்யகுன்ன கைரம் மின்ஹுன்ன வலா தல்மிஸூ அன்ஃபுஸகும் வலா தனாபஸூ பில் அல்காபி பிஃஸல் இஸ்முல் ஃபுஸூகு பஃதல் ஈமானி வமன் லம் யதுப் ஃபஉலாயிக ஹுமுழ்ழாலிமூன் (திருக்குர்ஆன் 49:12)

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் மற்றொரு சமுதாயத்தினரை அற்பமான பார்வையால் பார்க்க வேண்டாம். அவர்களை ஏளனம் செய்யவும் வேண்டாம். ஏனென்றால் ஒருவேளை அவர்கள் இவர்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கலாம். மேலும் பெண்கள் பிற பெண்களிடமும் இவ்வாறு செய்ய வேண்டாம்.

ஏனென்றால் ஒருவேளை பிற பெண்கள் இவர்களைவிட (ஆன்மீக ரீதியில்) சிறந்தவர்களாக

இருக்கலாம். தங்களுக்கிடையே ஒருவர் மற்றவரின் குறைகளைத் தேடியலையாதீர்கள். ஒருவர் மற்றரை கடும் சொற்களால் (கெட்ட வார்த்தைகளால்) அழைக்காதீர்கள். ஏனென்றால் இவை இறைவனுடனான உடன்படிக்கைக்கு மாறானதாகும். ஈமான் கொண்ட பிறகு கட்டுப்படாதவர் என அழைக்கப்படுவது கெட்டப் பெயராகும். எவர் இந்த செயல்களிலிருந்து விலகிக் கொள்வதில்லையோ அவரே அநீதியிழைப்பவராவார்.

**(4)** يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ لَا يَحِلُّ لَكُمْ أَن تَرِثُوا۟ ٱلنِّسَآءَ كَرْهًا ۖ وَلَا تَعْضُلُوهُنَّ لِتَذْهَبُوا۟ بِبَعْضِ مَآ ءَاتَيْتُمُوهُنَّ إِلَّآ أَن يَأْتِينَ بِفَٰحِشَةٍ مُّبَيِّنَةٍ ۚ وَعَاشِرُوهُنَّ بِٱلْمَعْرُوفِ ۚ فَإِن كَرِهْتُمُوهُنَّ فَعَسَىٰٓ أَن تَكْرَهُوا۟ شَيْـًٔا وَيَجْعَلَ ٱللَّهُ فِيهِ خَيْرًا كَثِيرًا

யா அய்யுஹல்லதீன ஆமனூ லா யஹில்லு ல(க்)கும் அன் தரிஸுூன் னிஸாஅ கர்ஹன் வலா தஃழுலூஹுுன்ன லிதத்ஹபூ பி பஃழி மா ஆ(த்)தைதுமூஹுுன்ன இல்லா அன் யஃதீன பிஃபாஹிஷத்தின் முபய்யினத்தின் வஆஷிரூஹுுன்ன பில் மஃரூஃபி ஃபஇன் கரிஹ்துமூஹுுன்ன ஃபஅஸா அன் தக்ரஹுூ ஷை அன் வயஜ்அலல்லாஹுூ ஃபீஹீ கைரன் கஸீரா. **(திருக்குர்ஆன் 4:20)**

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்கள் மனைவிமார்களின் செல்வங்களை

வலுக்கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள உங்களுக்கு ஒருபோதும் அனுமதியில்லை. எதனை நீங்கள் அவர்களுக்கு வழங்கியுள்ளீர்களோ அவற்றின் ஏதேனும் பகுதியை திரும்பப் பெறும் நோக்கில் (உங்கள் கோபத்திற்கு பயந்து அவர்கள் அந்த செல்வத்தை உங்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக) நீங்கள் அவர்களிடமிருந்து தனித்திருக்க உங்களுக்கு அனுமதியில்லை. ஆயினும் அவர்கள் பகிரங்கமாகப் பாவச்செயலில் ஈடுபட்டால் அப்போது அவர்களிடமிருந்து தனித்திருக்கலாமே தவிர அவர்களுடன் எப்போதும் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள்.

அவர்களின் ஏதேனும் விஷயம் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதால் (இதன் காரணமாக அவர்களுடன் தீயமுறையில் நடக்காதீர்கள்). உங்களுக்குப் பிடிக்காத ஏதேனும் விஷயத்தில் அல்லாஹ் பெரும் பெரும் நன்மைகளைத் தோற்றுவிக்க முற்றிலும் வாய்ப்புள்ளது. (அதாவது நீங்கள் பெண்களின் விரும்பாத செயல்களைப் பார்த்த பிறகும்கூட அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டால் அல்லாஹ் உங்களுக்காக மகிழ்சிக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு தானே பொறுப்பாளியாக உள்ளான்.)

(5) اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَ الْاِحْسَانِ وَ اِيْتَآئِ ذِى الْقُرْبٰى وَ يَنْهٰى عَنِ
الْفَحْشَآءِ وَ الْمُنْكَرِ وَ الْبَغْىِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ۝ وَ اَوْفُوْا بِعَهْدِ اللّٰهِ

إِذَا عٰهَدْتُّمْ وَ لَا تَنْقُضُوا الْاَيْمَانَ بَعْدَ تَوْكِيْدِهَا وَ قَدْ جَعَلْتُمُ اللّٰهَ عَلَيْكُمْ كَفِيْلًا ؕ اِنَّ اللّٰهَ يَعْلَمُ مَا تَفْعَلُوْنَ ۝

இன்னல்லாஹ யஃமுரு பில்அத்லி வல் இஹ்ஸானி வ ஈதாயிதில் குர்பா வயன்ஹா அனில் ஃபஹ்ஷாயி வல் முன்கரி வல் பக்யி ய இழுக்கும் லஅல்லகும் ததக்கரூன. வ அவ்ஃபூ பி அஹ்தில்லாஹி இதா ஆஹத்தும் வலா தன்குழுல் அய்மான பஃத தவ்கீதிஹா வகத் ஜஅல்துமுல்லாஹ அலைக்கும் கஃபீலன் இன்னல்லாஹ யஃலமு மா தஃப்அலூன் **(திருக்குர்ஆன் 16:91,92)**

பொருள்: நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுமாறும், உங்களுக்கு எவ்வித பிரதிபலனின் எதிர்பார்ப்புமின்றி மக்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளுமாறும் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். உங்கள் உயிரை பாதிப்பதுடன் தொடர்புடைய அல்லது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அந்த தீமைகளிலிருந்தும் (அரசனுக்கு எதிராக) கிளர்ச்சி செய்வதிலிருந்தும் உங்களைத் தடுக்கின்றான்.

நீங்கள் செயலாற்றுவதற்காக (இவற்றை) அவன் உங்களுக்கு அறிவுறுத்துகின்றான். இறைவனுடன் நீங்கள் செய்துள்ள உடன் படிக்கையை நிறைவேற்றுங்கள். உறுதியான சத்தியம் செய்து அதனை முறித்து விடாதீர்கள். நீங்கள் இதன்மீது அல்லாஹ்வை பொறுப்பாளியாக

ஆக்கி வைத்துள்ள நிலையில் (உங்களால் எப்படி இவ்வாறு செய்ய முடியும்). அல்லாஹ் உங்கள் செயல்களை நன்கறிகின்றான்.

(6) لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ ثَالِثُ ثَلٰثَةٍ ۘ وَمَا مِنْ اِلٰهٍ اِلَّآ اِلٰهٌ وَّاحِدٌ ؕ وَ
اِنْ لَّمْ يَنْتَهُوْا عَمَّا يَقُوْلُوْنَ لَيَمَسَّنَّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْهُمْ عَذَابٌ اَلِيْمٌ ۝ اَفَلَا
يَتُوْبُوْنَ اِلَى اللّٰهِ وَيَسْتَغْفِرُوْنَهٗ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ۝ مَا الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ
اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ وَاُمُّهٗ صِدِّيْقَةٌ ؕ كَانَا يَاْكُلٰنِ الطَّعَامَ ؕ
اُنْظُرْ كَيْفَ نُبَيِّنُ لَهُمُ الْاٰيٰتِ ثُمَّ انْظُرْ اَنّٰى يُؤْفَكُوْنَ ۝

லகத் கஃபரல்லதீன காலூ இன்னல்லாஹ ஸாலிஸு ஸலாஸஹ். வமா மின் இலாஹின் இல்லா இலாஹுன் வாஹிதுன் வஇன்லம் யன்தஹூ அம்மா யகூலூன லயமஸ்ஸன்னல்லதீன கஃபரூ மின்ஹும் அதாபுன் அலீம். அஃபலா யதூபூன இலல்லாஹி வயஸ்தக்ஃபிரூனஹு வல்லாஹு கஃபூருர்ரஹீம். மல் மஸீஹுப்னு மர்யம் இல்லா ரஸூலுன் கத் கலத் மின் கப்லிஹிர் ருஸுலு வ உம்முஹூ சித்தீக்கத்துன் கானா யஃகுலானித் தஆம உன்ழுர் கைஃப நு பய்யினு லஹுமுல் ஆயாத்தி ஸும்மன்ழுர் அன்னா யூஃபகூன். (திருக்குர்ஆன் 5:74-76)

பொருள்: அல்லாஹ் மூவருள் ஒருவன் என்று கூறுபவர்கள் நேர்வழியிலிருந்து மிகவும் தொலைவில் உள்ளனர். வணக்கத்திற்குரியவன் ஒருவன் மட்டுமேயாவான். மூன்று கடவுள்கள்

இருப்பதாக கூறுபவர்கள் தங்களின் கூற்றிலிருந்து பின்வாங்கவில்லையாயின் அவர்களில் இக்கொள்கையில் நிலைபெற்றிருப்பவர்கள் மீது வேதனையளிக்கும் தண்டனை வந்தடையும். அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் குனிந்து அவனிடம் தமது பாவங்களுக்கு மன்னிப்பு கேட்க மாட்டார்களா?

அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் கருணையாளனுமாவான். மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன்தோன்றிய பிற தூதர்கள் மரணித்துவிட்டார்கள். (அவர்களுடன் அவரது வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் முற்றிலும் ஒத்ததாக இருக்கின்றது. பிறகு எப்படி அவர் கடவுள் என்பது நிரூபணமாகும்?) அவரது தாயார் ஒரு நல்ல பெண்மணியாக இருந்தார். அவர்கள் இருவரும் உணவருந்தி வந்தனர். (இறைவன் உணவருந்துவதிலிருந்து தூயவனாவான்). நாம் எவ்வாறு அவர்களுக்காகச் சான்றுகளை முன்வைக்கின்றோம் என்பதைப் பாருங்கள். பிறகு எங்கெல்லாம் சுற்றித் திரிகிறார்கள் என்பதையும் பாருங்கள்.

(ரிவியூ மார்ச் 1914)

மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது